Rediffusion/Edelman

**Publication:** Dinamalar
**Date:** 25/08/2013
**Edition:** Coimbatore
**Page No.:** 11
**Headline:** Winners of TCS IT Wiz

# வினாடி வினா போட்டி : கோவை மாணவர்கள் அசத்தல்

**கோவை, ஆக. 25-**

டாடா கன்சல்டன்சி சர்வீஸ் (டி.சி. எஸ்.,) நிறுவனம் சார்பில் நடைபெற்ற 'டி.சி.எஸ் ஐடி விஸ் 2013' வினாடி வினா போட்டியில் கோவையைச் சேர்ந்த மாணவன் அசத்தினார்.

'ஸ்மார்ட் டெக் விசார்ட் தேடலுக்கான டி.சி.எஸ் ஐடி விஸ் 2013' போட்டிகள் இந்தியாவின் 14 முக்கிய நகரங்களில் நடந்தது.

கோவை, குனியமுத்தூர் கிருஷ்ணா கல்லூரியில் நடந்த இப்போட்டியில் 8 முதல் 12ம் வகுப்பு வரை (ப்ரீ யுனிவர்சிட்டி ஜூனியர் கல்லூரி மாணவர்கள் உட்பட) பயிலும் 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில் கோவை ஜி.கே.டி பள்ளி மாணவர்கள் நவீன் கிருஷ்ணன் மற்றும் ராகுல் முதலிடமும், புனித ஜூட்ஸ் பப்ளிக் பள்ளியை சேர்ந்த அனுஷியா பிரபா மற்றும் ஜியோன் பிலோமின் ஆண்டனி ஆகியோர் இரண்டாம் இடமும் பெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, 'குரோத் மார்க்கெட்டிங்' தலைவர் ரவி விஸ்வநாதன் பரிசுளை வழங்கினார்.

வெற்றி பெற்றவர்கள் 'ஸ்மார்ட் டெக் விசார்ட்' பட்டத்திற்கான மெகா இறுதிச் சுற்றில் கோவை சார்பில் கலந்து கொள்கின்றனர்.